[1979 பிப்ரவரி 12

மண் வள ஆராய்ச்சியின் முடிவைத் தெளிவாக தக்க வரை படத்துடன் ''ஆத்தூர் தாலூகா மண்வள ஆராய்ச்சி (Soil survey of Author Taluk) என்னும் அறிக்கையின் மூலம் இதன் நகல் வெளியிடப்பட்டுள்ளது. ஆத்தூர் தாலூக்காவில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கை மிகவும் தெளிவாக எல்லா விவரங்களையும் எடுத்துக் காட்டும்.

இது தவிர, கல்ராயன் மலைப் பகுதியில் உள்ள சின்னக்கல்ராயன் ஜடயகவுண்டர் ஜாகிர்ஸ்லில் ஒரு பகுதியையும் ஆராய்ந்ததற்கான முடிவுகளை கல்ராயன் மலைப்பகுதி மண் ஆராய்ச்சி அறிக்கையின்மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மலை மேம்பாட்டுத் திட்டத்தின்படி இம்மலையின் மண்வளத்தை எவ்விதம் சிறந்த முறையில் பயனுள்ளதாக்கலாம் என்பதைத் தெளிவுடன் வரை படத்துடன் சிறப்பு அறிக்கையின்மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் எந்தெந்த பகுதிகளில் '' மண்வள ஆராய்ச்சி'' செய்யும் உத்தேசம் உள்ளது ?

ஏற்கனவே விரிவான மண்வள ஆய்வு செய்யப்பட்டு விட்டதால் ஆத்தூர் தாலூகாவில் மேலும் மண்வள ஆய்வு மேற்கொள்ளும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

இணைப்பு VI

[151ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 216-க்கான விடையைக் காண்க].

யுனெஸ்கோ நிறுவனம் (இதுவரை 40,350 டாலர் அதாவது ரூ. 3,22,800-ம்) உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்திற்கு நிதி உதவி செய்துள்ளது அவை வருமாறு:—

இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவின் உறுப்பினர்–செயலர் திரு. ஏ. சுப்பையா அவர்கள் 1969-ம் ஆண்டு ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலுள்ள 14 நாடுகளிலுள்ள 50-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பார்வையிட யுனெஸ்கோ நிறுவனம் உதவியது.

(2) இந்நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளராகிய திரு. வி. சுப்பிரமணியன் அவர்களுக்கு 1969—70-ம் ஆண்டின் பங்கு பெறும் திட்டத்தின்கீழ் (Participation programme) பொருளுதவி செய்து (fellow-ship) அவர் மொழி கற்பிக்கும் முறைகளை (Methods of Language Teaching) ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பல்களைக் கழகங்களிலிருந்து தெரிந்துவர அனுப்பியது. மேலும் 1972-ம் ஆண்டு இந்நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எஸ். பாலச்சந்திரன், டாக்டர்

1979 பிப்ரவரி 12]

பி. கோதண்டராமன் ஆகிய இருவரையும் இலக்கியத் திறனாய்வு (Literary criticism) பயிற்சி பெற அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றுவர பொருளுதவி செய்தது.

(3) மின்சாதன படியெடுப்பு கருவி ஒன்றை பரிசாக அளித்துள்ளது.

(4) மொழி ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை நிறுவுவதற்கு உதவி செய்துள்ளது.

(5) இந்நிறுவன வெளியீடுகளான தமிழியல் (Journal of Tamil Studies) மற்றும் ''நவீன தமிழில் ஒரு பாடம் (A Course in Modern Standard Tamil) ஆகியவற்றின் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறது.

இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இவ்வரசு அந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடராச் செலவுகளை மானியமாக அளித்து வந்துள்ளது. இவ்வகையில் ஆண்டுதோறும் ரூ. 3·00 இலட்சம் இந்நிறுவனத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

இணைப்பு VII

[155-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 226-க்கான விடையைக் காண்க.]

விடை.

ஆம். தற்போது பல இடங்களில், வருடாந்திர நில நீர் நிரப்பைக்காட்டிலும், நிலநீர் இறவை அதிமாக உள்ளது. பொதுவாக, மண்வளப் பாதுகாப்பு திட்டப் பணிகள் மூலம், நிலத்தடி நீர் அபிவிருத்தி அடைய உதவுகிறது. ஒரு மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள கசிவுநீர் குட்டை கட்டப்படுகிறது என்றால் அக்குட்டையைச் சுற்றி சுமார் 3,000 அடி ஆரத்திற்குள் அடங்கும். கிணறுகளில் நீர்மட்டம் கணிசமாக, உயர்வடைகிறது என்று உணரப்பட்டுள்ளது.

2. மண்வளப் பாதுகாப்பு வேலைகள் இவ்வாண்டில் 56,820 ஹெக்டேர் நிலங்களுக்குச் செய்யப்படுகிறது. அதில் சுமார் 46,000 ஹெக்டேர் நிலங்களில் சம உயர வரப்புகள் கட்டப்படுகின்றன. கசிவு நீர்க் குட்டைகள் வறட்சி மீட்பு திட்டத்தின் கீழ் கட்டப்படுகிறது. மற்றும் விவசாய பெருங்குடியின் விண்ணப்பங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கசிவுநீர் குட்டைகள் அவ்வப்போது அரசு ஆணை பெற்று கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை இம்மாநிலத்தில் செய்யப்பட்ட மண்வளப் பாதுகாப்பு வேலையின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.